பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணுமலைபுரம், மதராஸ்-28.

"முயற்சி திருவினை யாக்கும்"

தொகுதி 25	சார்வரி ஞூ வைகாசி மீ 1960 மே மீ	பகுதி 2

பொருளடக்கம்

பக்கம்

1. "ஐயோ! வேண்டாமே! குழந்தைகள் எதிரிலே!"
   —வி. நடராஜன் ... 35
2. புத்தக நண்பன்
   —நல்லைக்கவி அ. இளங்கோவன் ... 37
3. புதிய பாடதிட்டம்
   —V. R. சுப்பிரமணியன் ... 38
4. கல்விக்குமா கட்டாயம்?
   —N. வேங்கடாசல ஐயங்கார் ... 40
5. தென் இந்திய ஆசிரியர் சங்கம் 1959-60-ஆம் ஆண்டறிக்கை... 43
7. 50th Madras State Educational Conference, Mathurai, Draft Resolutions ... 48
8. செய்தித் திரட்டு ... 51
9. பத்திராதிபர் குறிப்பு ... 53

உள் நாடு: வருஷ சந்தா ரூ. 2.00 தனிப் பிரதி 25 ந.பை.

ஐந்தாம் வகுப்புக்குரிய பாட புத்தகங்கள்

புதிய பாடத்திட்டத்திற்கேற்ப எழுதியவை

புதுமுறை விஞ்ஞானம்

நூலாசிரியர்—தி. பி. ஸ்ரீனிவாச வரதன், ச. சாமிநாதன், வை. நாராயணசாமி

144 பக்கங்கள் ரூ. 1.10

மாணவர் அன்றாடம் காணும் பல நிகழ்ச்சிகளையும், அவற்றினிடையே உள்ள நெருங்கிய தொடர்பையும் இந்நூல் விளக்குகிறது. பாடத்திட்டத்திலுள்ள பொருள்கள் எல்லாவற்றைப் பற்றியும், சிறப்பாக தோட்டம் அமைத்தலைப் பற்றிய விவரங்களும், மாணவர் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் இந்நூலில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

சமுதாய வளர்ச்சி நூல்

நூலாசிரியர்—ச. இராமானுஜம், ரா. வஜ்ரேஸ்வரி

234 பக்கங்கள் ரூ. 1.75

நில நூல், வரலாறு, ஆட்சி முறை ஆகியவைகளிடை காணப்படும் தொடர்பை உணர்த்துவதையே குறிக்கோளாகக் கொண்டு இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. போதிய பயிற்சிகளின் மூலம் மாணவர்களின் சமூக அறிவைப் பெருக்க சமூக வளர்ச்சியையொட்டிய பல கருத்துக்களையும், தகுந்த சித்திரங்களுடன், சிறு சிறு பாடங்களாகப் பிரித்து அமைக்கப்பட்டுள்ளது இந்நூலின் ஒரு சிறப்பாகும்.

நவீன கணித சாரம்

நூலாசிரியன்—ரா. நரசிம்மாச்சாரி

208 பக்கங்கள் ரூ. 1.60

கணிதத் தொடர்புள்ள கடினமான பொருள்களைச் சிறு பிள்ளைகள் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் இவ் வகுப்பிற்குரிய கணிதபாடம், சிறு சிறு பாடங்களாகப் பிரிக்கப்பட்டு, இந்நூலில் அமைக்கப்பட்டுள்ளது. மனத்தால் செய்யவும், எழுதிச் செய்யவும் போதுமான அளவு கணக்குகள் சேர்க்கப்பட்டுள்ளன. கணிதபாடம் கற்கும்போது மாணவர்களிடை ஏற்படும் அலுப்பைக் குறைத்து, அவர்களிடை உற்சாகமும் ஊக்கமும் ஊட்டத்தக்க வகையில் ஆங்காங்கு சித்திரங்களும், படவகைகளும் சேர்த்திருப்பது இந்நூலின் சிறப்பாகும்.

ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி பிரஸ்

பாலர் கல்வி

தொகுதி 25	சார்வரி ஹ வைகாசி மீ 1960 மே மீ	பகுதி 2

"ஐயோ! வேண்டாமே! குழந்தைகள் எதிரிலே!"

ஸ்ரீ வி. நடராஜன்

இந்த தலைப்பைப் படித்தவுடன் ஏதோ சினிமா காட்சியில் இருப்பதாக நினைக்கிறீர்களா? ஆம், ஒரு விதத்தில் அது சரி தான். தினசரி குடும்ப வாழ்க்கையும் ஒருவித சினிமாதான்.

"இன்றைக்கு நீ செய்திருக்கும் பாதம் அல்வா வெகு ஜோர்" என்றும் அல்லது "பலே! வெகு நன்றாகவே பதில் சொல்லி விட்டாய்" என்றோ அல்லது "பேஷ்! வம்பு பேச வந்தவளிடம் வெகு சாதுர்யமாய்ப் பேசி அனுப்பிவிட்டாய்" என்றோ தன் இளமனைவியை மெச்சிப் பாராட்டும் இளங் கணவன் அவளை திடீர் என்று பிடித்துக் கொஞ்சும்போது நிகழும் செயல் இவ்விதமே அமையும். ஆனால் குழந்தைகள் பெற்ற தாய் இச்சமயம் கணவனை மெதுவாக விலக்கிவிட்டு, "போதுமே! குழந்தைகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!" என்று சிணுங்கிக்கொண்டு சொல்வாள்.

தாய் தந்தையர் சில சமயம் கடுமையான உணர்ச்சி வசப்பட்டு வெகு காரமாக வாக்கு வாதம் செய்யும்போதும் குழந்தைகள் எதிரில் இருப்பதை கவனியாமல் கன்னாபின்னா வென்று வசை மொழிகள் வழங்குவதும் சாதாரணம். தான் எதிர்பார்த்த மாதிரி இல்லாமல் வேறு வகையில் ஏதேனும் சம்பவித்து விட்டாலும் இப்படித்தான் பேச்சு ரீதி கேவலமாயிருக்கும். தான் விரும்பாத ஒருவரைப்பற்றியும் இவ்விதமே குழந்தைகள் எதிரில் வசைபுராணம் தொடங்கி விடுவார்கள். அவ்வித சந்தர்ப்பத்தில் ஒரோர் சமயம் "ஐயோ! வேண்டாமே! குழந்தைகள் எதிரிலே" என்ற பேச்சும் கேட்கலாம். பொதுவாக தாயார் தான் இவ்விதம் எச்சரிப்பது அதிகம்.

குழந்தைகள் முன்னால் இவ்வாறு பேசுவதும் நடந்துகொள்வதிலும் என்ன தவறு? ஏன் இவ்வித எச்சரிக்கை வேண்டும்? இதை சற்று ஆராயவேண்டும். குழந்தைகள் பேச்சும் நடத்தையும் பெரும்பாலும் தங்களுடன்தினந்தோறும் பழகிவரும் பெரியோர்களைக் "காபி" அடிப்பதாகவே இருக்கும். குழந்தைகள் விளையாட்டுக்களில் கவனித்தால் இவ்விஷயம் நன்கு புலப்படும். அவர்கள் கற்பனை செய்யும் ரீதியில் குடும்பத் தலைவன் பேச்சும் நடத்தையும் இவ்விதந்தான் இருக்கும் என்று அதற்கேற்ப நடந்து கொள்கிறார்கள். "மருந்து! மண்ணாங்கட்டி, வீட்டில் நுழைந்தவுடன் இந்தத் தொல்லைதானா?" என்று தந்தை அங்கலாய்த்துக்கொள்வதுபோலவே சிறுவனும் விளையாட்டில் பேசுகிறான். அம்மாவாகக் கற்பனை செய்துகொண்டு பேசும் சிறுமியும், "ஓச்சல் ஒழிவின்றி நாயாக உழைக்கிறேன். என்னத்தைக் கண்டேன்? ஒரு நல்ல வார்த்தை கூட கிடையாது" என்று தன் தாயார் அலுத்துக்கொள்வது போலவே பேசுகிறாள்.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் குழந்தைகளுக்கு புத்திமதி உபதேசம் செய்வதோ பிரமாதம்! "ஒருவரையும் குற்றம் சொல்லிப் பேசாதே. எல்லாரிடமும் அன்புடன் நடந்துகொள்" என்று எல்லாம் பிரசங்கங்கள் செய்வார்கள். அவர்கள் உபதேசம் நடைமுறையில் எவ்வளவு பலன் தருகிறது! சிறுவர் சிறுமிகள் இயல்பாகவும் சுலபமாகவும் பெற்றோர்கள் பிரயோகிக்கும் பேச்சுப் பதங்களையே உபயோகிக்கிறார்கள். ஒரோர் சமயம், "இவ்விதம் கெட்ட பேச்சு பேசக் கூடாது என்று எவ்வளவு தடவை புத்தி சொல்லியிருக்கிறேன்" என்று பெரியோர்

கள் கண்டித்தால், சிறுவர் சிறுமியர் 'உர்'ரென்று முறைத்துக்கொள்வார்கள். இரண்டொருவர், "நீங்கள் பேசுவதையே தான் திருப்பிச் சொல்கிறேன். அது தப்பா ? நீங்கள் பேசுவதே அப்படியானல் கெட்ட பேச்சுதானு?" என்று திருப்பிக் கேட்பதுமுண்டு. முகத்தில் அடித்தாப் போல் சிறுவர் பேசியதைக் கேட்ட பெரிய வருக்கு வெகு கோபம் வந்துவிடும். கோபத்தினுல் கிடைக்கும் பலன் ! சரி யான அடியும் உதையும்.

இளைஞர் கல்வித் திட்டத்தில் வெற்றி காணவேண்டுமெனில், சும்மா பாடத் திட்டத்தில் மாறுதல்களும் பரீட்சை முறைகள் திருத்தங்களும் மாத்திரம் போதா. இக்காலத்தில் பள்ளி மாணவர் கள் ஒழுக்கம் மிகவும் குறைந்துவிட்ட தாகப் பெரும் புகார் செய்யும் பெரியோர் கள் கவனிக்க வேண்டிய விஷயம் இது தான். பெரியோர் சமூக வாழ்க்கை எவ்வளவு மேன்மையாக உள்ளது ? பெரி யவர்கள் சண்டையில் ஒருவருக்கொரு வர் ஏசிப் பேசிக்கொள்வது மிகவும் கேவலமாக இல்லையா ? இளைஞர்களைக் குறைசொல்வோர் தாங்களே அவர் களுக்கு வழிகாட்டிகளாக இருக்கிறுர்கள் என்ற உண்மையை அவர்களே அறிய வேண்டும்.

முக்கியமாக ஆசிரியர்கள் தத்தம் குடும்ப வாழ்க்கையிலும் சரி, ஆசிரியத் தோழர்களுடன் பழகும்போதும் சரி, தங்கள் பேச்சும் நடத்தையும் இளைஞருக் குச் சிறந்த பண்பினை உருவாக்கும் வகையில் இருப்பது அவசியம். ஆசிரியர் களும் பெற்றோர்கள் அல்லவா ? அவர்கள் குழந்தைகளும் தம் தாய் தந்தையர் பேச் சையும் முகச் சேஷ்டைகளையும் "காபி" அடித்துவிடுவார்கள். இதர பெற்றோர் களைப்பற்றிக் குறை கூறிக்கொண்டு இருப்பதைவிட ஆசிரியர்களும் தங்கள் பேச்சு நடத்தையை ஆய்ந்து பார்த்து அடிக்கடி சீர்திருத்திக் கொள்வது வெகு அவசியம்.

இளைஞர்கள் அடிக்கடி மட்டரகமான சினிமாப்படங்களைப் பார்ப்பதனுல்தான் அவர்கள் ஒழுக்கம் மட்டமாகி விடுகிறது என்று பொது அபிப்பிராயம். இருக்க லாம். ஆனுல் திரைப்படம் பார்ப்பது சொற்ப நேரம். தினசரி வீட்டு வாழ்க் கையிலும் சமுக வாழ்க்கையிலும் பார்த் தும் கேட்டும் பழக்கப்படுவது எவ்வளவு நேரம். இந்த தினசரி அனுபவம் அவர் களிடம் நிரந்தரமாகப் பலன் தரும் அல் லவா ? பெற்றோர்கள் பள்ளிகளைக் குறை கூறுவதும் பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர் களைக் குறை சொல்வதும் எல்லாருமாகச் சேர்ந்து ஒருமித்து சினிமாக்களின்மேல் பழிபோடுவதுமாய்விட்டது. இந்தப் பழி போடும் வேட்டை ஒருபுறம் இருக்க, பாவம் குழந்தைகள் பயிற்சியும் கல்வியும் கவனிப்பாரற்று நிற்கிறது.

சமீபத்தில் ஒரு அமெரிக்கப் பத்திரி கையில் தாமஸ் ப்ளெமிங் என்பவர் பெற் றோர்களுக்கு எச்சரிக்கை செய்திருக் கிறுர். அவர்கள் வீட்டு வாழ்க்கையில் குழந்தைகள் முன்னிலையில் பேசும் முறையும் நடந்துகொள்ளும் விதமும் மிகவும் திருத்திக் கொள்ளவேண்டும். அநேக குடும்பங்களில் நடக்கும் சம்பா ஷணையை அப்படியே "டேப் ரிகார்டு" செய்து, பிறகு அந்தப் பெற்றோர்களே கேட்கும்படி வைத்திருக்கிறுர். "நாமா இவ்விதம் பேசினேம்" என்று அவர்களே அதிசயப்படும்படி இருக்கிறது. "அப்பா! நீங்கள் சொல்லும் வசை மொழிகளையே தான் நானும் திருப்பிச்சொல்கிறேன்" என்று சிறுவன் விடை அளிக்கும்போது தந்தைக்கு எவ்வளவு கோபம் ! "டேப் ரிகார்டில்" கேட்டவுடன் ஆச்சரியம் !

வீட்டில் சம்பாஷணைக்கான விஷயங் களை, அதிலும் முக்கியமாக குழந்தை கள் எதிரில் பேசும்போது, வெகு ஜாக்கிர தையாக யோசித்து அறிவிக்கவேண்டும். புருஷனும் மனைவியும் இதுபற்றி திட்ட மிட்டுக் கொள்ளலாம். தினப்படி கால அட்டவணை தயார் செய்யலாம். காலை யில் எழுந்தவுடன் குழந்தைகள் தாய் தந்தையருடன் கால் மணி நேரமாவது ஒன்று கூடிப் பேசுவது. இதை காலையில் கடவுள் தோத்திரம் எனச் சொல்லலாம். அந்தந்த குடும்பத்து தொழில் வசதிக் கேற்ப மற்ற தினப்படி அம்சங்கள் மாறி இருக்கும். ஆயினும் இரவு எல்லாரும் சேர்ந்து உணவு உட்கொள்வது, சிறிது நேரம் பொழுது போக்குப் பேச்சு, விளை யாட்டு, விடுகதை, பாட்டு, படுக்கப் போகு முன் கடவுள் தோத்திரம் என திட்டமிட் டுக் கொள்வது மிகவும் நல்லது.

இதர தொழில்களில் ஈடுபட்டிருக்கும் குடும்பங்களை விட ஆசிரியர் குடும்பங் களிலேயே இந்தமாதிரி ஒரு திட்டம்

அனுசரிப்பது உத்தமம். அவ்விதத் திட்டப்படி வாழும் குடும்பத்தின் தினசரி சம்பாஷணையை "டேப் ரிகார்டு" செய்து, அது ஒரு வழிகாட்டியாக மற்ற குடும்பங்களுக்கு உதவி செய்யலாம்.

மட்ட சினிமாப் படங்கள் என்று குறைப்பட்டுக் கொள்பவர்கள், சிறந்த வாழ்க்கைப்படங்கள் எடுக்க உதவி செய்வது அவசியம். கசண்டை எடுத்துக் காட்டுவது முக்கியமல்ல. நல்ல ருசியான பாகத்தை மாத்திரம் தனியாக எடுத்துக் காட்டி சோபிக்கும்படி செய்யலாம். இந்த வகையில் ஆசிரியர் சங்கங்கள் பாடுபட்டு வெற்றி காண முயற்சி செய்யலாம்.

புத்தக நண்பன்

நல்லைக்கவி அ. இளங்கோவன்

1. புத்தக நண்பனவன்—மெத்தப்
பொறுமை யுள்ளவன்
வித்தக ராகிட நம்—அறிவு
விளையச் செய்திடுவான் !

2. ஓய்வு நேரத்திலே—நமக்கு
உண்மை நன்மைகளைச்
சாய்வுநாற் காலியிலே—நாம்
சாய்ந்திருக் 'கத்தருவான் !

3. கவலை போக்கிடுவான்—உள்ளம்
கனியச் செய்திடுவான்
தவறு காட்டிடுவான்—நம்மைத்
தட்டிக் கொடுத்திடுவான் !

4. சோம்பலைப் போக்கிடுவான்—நமக்குச்
சுறுசுறுப் பைத்தருவான்
தேம்பலைத் தீர்த்திடுவான்—நெஞ்சு
திடம்பெறச் செய்திடுவான் !

5. புத்தறி வூட்டிடுவான்—புத்தம்
புதுமை காட்டிடுவான்
புத்தக நண்பனவன்—நட்பைப்
போற்றிப் புகழ்ந்திடுவோம்.

புதிய பாடதிட்டம்

V. R. SUBRAMANIAN

(Head Master, A.C.C. Factory Ele. School, Madukkarai.)

ஆரம்ப ஆசிரியர்களாகிய நாம் இரு வருட அனுபவம் பெற்று, ஆங்கிலம் ஐந் தாம் வகுப்பிற்கு 1960—61 பள்ளி ஆண் டில் கற்பிக்கு முன்னர், முன்னேற்ற நோக்குடன் திட்டத்திலுள்ள குறைகளைப் போக்கி நிறைவுகள் காண வழி வகை கள் தேடுவது நம் கடமையாகும்.

கால மாறுதலுக்கேற்ப புதிய பாடத் திட்டத்தை ஆசிரியர்கள் வரவேற்றூர்கள். திட்டத்தின் சுமையையும் ஏற்றூர்கள். ஆயினும் நிபுணர்கள் உற்சாகத்தில் தயாரித்த திட்டத்தில் சில அனுபவ சாத் தியமற்ற விஷயங்களைக் கண்டதும் அவைகளை எடுத்துக் கூருமல் விடுவது கடமை தவறியதாகும் என்றே எண் ணித் துணிந்தேன்.

முதலாவதாக சங்கீத பாடம் எடுத்துக் கொள்வோம். இது கலையும் கைத்தொழி லும் (Arts and Crafts) என்ற பிரிவின் கீழ் கட்டாய பாடமாக உள்ளது. இரண் டாவது வகுப்பிலேயே சாஸ்திரீய சங்கீ தம் கற்பிக்க வேண்டும். ஆதி, ருபக தாளம் அறியவேண்டும். மூன்ருவதில் ஸ்வராவளிகள், பல்லவி, அனுபல்லவி, சரணம் தெரியவேண்டும். நான்காவதில் ஜண்டைஸ்வரங்கள், ஆரோகண அவ ரோகணம், ஐந்தாவதில் ஹெச் சஸ்தாயி ஸ்வரங்களுடன் மொத்தம் சுமார் எழு பது பாடல்களுக்குக் குறையாது ஒன்று முதல் ஐந்தாவது வகுப்பு வரை கற்பிக் கப்பட வேண்டும். இது சாதாரண ஆசி ரியர்களால் முடியுமா? ஏதோ சில நகரங் களிலுள்ள பாடசாலைகள் தவிர; மற்ற கிராம பாடசாலைகளில் அநேகமாக இது கைவிடப்பட்டதோர் அம்சமாகும். இக் காலத்தில் கற்றுக் கொடுக்கவேண்டிய அதன் அவசியத்தை நான் மறுக்கவில்லை, தனிப்பயிற்சி பெற்ற சங்கீத ஆசிரியர் களால் தான் அது முறைப்படி சாத்திய மாகும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

இரண்டாவது கைத்தொழில் பாடம். ஆசிரியர்கள் கைத் தொழிலாளர்கள் உதவிபெற்று நடத்தவேண்டும். அல்லது ஆசிரியர் சங்கங்களுக்கு அவர்களை வர வழைத்து கற்பிக்கச் செய்யவேண்டு மென்றும் பாடதிட்ட முகவுரையில் கூறப் படுகிறது. மேலும் நான்கு கைத்தொழில் கள் (1) நூற்பதும் நெசவு செய்வதும் (2) காகிதம், அட்டைகளால் வேலைகள் (3) தோட்ட வேலை (4) களிமண் வேலை எனக் கூறிவிட்டு இவைகளில் ஏதேனும் இரண்டு செய்யப்பட வேண்டுமென்றும், அவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்ட வேலை களை ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும் விரிவான ஒரு திட்டம் கொடுத்திருப்ப தைக் கவனித்தால் தேர்ச்சி பெற்ற ஆசிரி யரின் அவசியத்தை நன்கு உணரலாம். முகவுரையில் தனி ஆசிரியர் தேவை இல்லை என்ருலும், அனுபவத்தில் தேவை யின் உண்மையை உணருகிரேம். உதாரணமாக களிமண் வேலையில் பிரத் யேகமான கருவிகள் தேவையில்லை யென் ருலும், நான்காவது வகுப்புப் பயிற்சியில் குயவன் சக்கரத்தைக் கையாளுதல் ஜாடி, குடம், கூஜா ஆகியவற்றிற்கு நிறம் தீட்டுதல் சூளையில் சுடுதல் என் றெல்லாம் எழுதியுள்ளதைப் படிக்க ஆச் சரியமாகத்தான் உள்ளது. மேலும் தோட்டவேலை என்றபகுதியில் பிள்ளைகளை பாடசாலை நேரம் இல்லாத காலத்திலும், பருவ காலங்களுக்குத் தக்கபடியும் வேலை வாங்க உற்சாக மூட்டப்படுகிறது. இது எந்த அளவுக்கு சாத்தியமாகும் என்பது சிந்தனைக்குரிய விஷயம். மேலும், பாட திட்டம் ஒரு வழிகாட்டியே என்றும் இத் தகைய வேலைகள் பல செய்யக்கூடுமென் றும் கூறுவது விந்தையாய் இருக்கிறது. நாம் ஒரு பொதுக் கல்வியில் (General Education) தான் ஈடுபட்டிருக்கிரேமே தவிர ஒரு தனிக் கல்வியில் (Special Education) அல்ல என்பதை மறந்து விடக் கூடாது. எப்படியும் இப்பாட போதனைக்கு ஒரு தனிஆசிரியரே தேவை யானவர் என்பது மறுக்கவும், மறைக்க வும் முடியாத விஷயம்.

மூன்ருவதாக தேகப் பயிற்சி. பாடதிட்டத்தைப் படித்து புரிந்துகொள்வதே கடினம். பல இடங்களில் நிதர்சனங்களும் விமர்சனங்களும் தேவை. அவ்வாருயின், எழுதியுள்ளது போல் செய்வது எவ்வளவு கடினமானது என்பதை சொல்லாமலே அறியலாம். இவ்வளவு விரிவான திட்டம் சாத்தியமானதா? விளையாடவே போதுமான இடம் இல்லாத பாடசாலைகள் எத்தனை? இடம் உள்ள பாடசாலைகளிலும் சொல்லிக் கொடுக்கத் திறமை யுள்ளவர் எத்தனை பேர்? என்ற பல பரிசீலனைக்குரிய விஷயங்களாகும்.

நான்காவது ஆங்கில பாடம். இதை முறைப்படி போதிக்க பிரிட்டிஷ் கௌன்ஸில் (British Council) உதவியுடன் நமது அரசியலார் கருத்தரங்கு (Seminar) நடத்தி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிருர்கள். அதன்படி ஒரு ஆசிரியர் ஒலி எழுத்து சாஸ்திரம் (Phonetics) உறுத்திய உச்சரிப்பு (Accent) வாக்கியத்தின் பேச்சுமுறை (Intonation) உச்சரிப்பு (Pronunciation) ஆகியவை நன்கு கற்றவராக இருக்கவேண்டும். அல்லது கற்றுக்கொள்ளவேண்டும். தொன்றுதொட்டே தமிழ் நாட்டில் தமிழர்கள் 'வாழைப்பழம்' என்ற சொல்லை பலவிதமாக உச்சரிப்பதை நாம் காண்கிருேம். அவ்வாறிருக்க அன்னிய பாஷையில் உச்சரிப்பு கசடறக் கற்பதென்பது எளிதாகுமா? முடியாது என்று நான் முடிவு கட்டவில்லை. பாஷை பேசப் பேசத்தான் திருந்தும். தொடர்ந்த நாப்பழக்கத்தால் தான் வரும். தமிழ் ஆட்சி மொழியான பிறகு ஆங்கிலம் பேசுவதோ எழுதுவதோ மறைந்து வருகிறது. அதனுல் ஒவ்வொரு ஆரம்பப் பாடசாலையிலும் ஒரு வானெலிப் பெட்டி இருந்தால்தான் ஆங்கில உச்சரிப்பு பழக முடியும். ஒரு சிலநாள் கருத்தரங்கில் பயிற்சி பெற்ருல் மாத்திரம் போதாது. ஐந்தாவது வகுப்பு வரை உள்ள அநேக கிராமப் பள்ளிகளில் இரண்டு, மூன்று ஆசிரியர்கள்தான் காணலாம். ஒரு வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் என்ற கட்டாயம் ஏற்பட்டால் அன்றி இலவச கட்டாயக் கல்வியால் மாணவர் தொகை பெருகி வரும் இந்நாளில் எவ்வளவுதான் ஊக்கமும், உற்சாகமும் நிறைந்த ஆசிரியரானுலும் ஆங்கில போதனையில் வெற்றி காண்பது அரிது. ஆங்கிலம் கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியரிடமும் தென்னிந்திய ஆசிரியர் சங்கம் (S.I.T.U.) வெளியிட்டுள்ள Guide to the teaching of English என்ற புத்தகம் கைவசம் அவசியம் வேண்டும். அப்போதுதான் வாக்கிய 'அமைப்பு முறை' (Structure method) பிரதேச பாஷை கலப்பில்லாமல் போதிக்க முடியும். கிராமப் பள்ளிகள் நன்கு அமைக்கப்பட்டால் அன்றி இம்மொழி போதனையில் நகரத்திற்கும் நாட்டுப்புறத்திற்கும் தரத்தில் வித்தியாசம் இருந்தே வரும் என்பது புலனுகும் ஓர் உண்மை.

மேலும் ஆதாரக் கல்வி பாணியில் செயல்கள் பல புரிய முற்படுங்கால் பொறுப்பு அதிகரிப்பதால் மேலே குறிப்பிட்ட பல விஷயங்களையும் புறக்கணிக்கலாகாது. தரம் உயர வேண்டுமானுல் தனிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் அதிகம் வேண்டும். பாட திட்டச் சுமையை நிபுணர்கள் நினைத்தவாறு ஏட்டில் ஏற்றினுல் மட்டில் போதுமா? நடத்தும் ஆசிரியர்களின் வேலை பளுவையும் ஆராயவேண்டும். 'பாடசாலையின் ஒட்டகங்களாக' கல்வி யாத்திரையை நம் ஆசிரியர் குலம் நடத்தி வருவது உண்மைதானு என ஆராய்ந்து அறிவது பெருமைக் குரியதாகும்.

நன்கு ஆராயுமிடத்து பாட திட்ட பரிசீலனைக் கமிட்டி ஒன்றை அரசியலார் அமைத்து அனுபவமுள்ள ஆசிரியர்களையோ அல்லது S.I.T.U. ஆரம்பக் கல்வி நிரந்தரக் குழு ஒன்றையோ கலந்து ஆலோசித்து இனி மாறுதல்கள் செய்யின் கல்வித் துறையில் பல வெற்றிகள் காண்பதுடன் வருங்கால பிரஜைகள் நற் பிரஜைகளாவதும் திண்ணம்.

கல்விக்குமா கட்டாயம்?

திரு. N. வேங்கடாசல ஐயங்கார்

கரும்புதின்னக் கூலியா என்பதுபோல் கல்விக்கு கட்டாயம் தேவையா, என்பது ஒரு சிலரின் ஐயப்பாடு. இதனை ஆராய்வதே இக் கட்டுரையின் கருத்தாகும்.

"துள்ளித் திரிகின்ற காலத்தில் எந்தன் துடுக்கடக்கிப் பள்ளிக்கு வைத்திலனே என் தந்தையாகிய பாதகனே" என்று பரிதவித்துக் கூறுகிறான், கல்வி பெறாமல் கஷ்டமடைந்த வாலிபன் ஒருவன். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் நம் கிராம மக்களின் நிலைமையும் அங்கங்கே அமைந்த பள்ளிகளின் நிலைமையையும் இன்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பத்து மைல் சுற்று வட்டாரத்தில் ஓரிடத்தில் எட்டாவது வகுப்புவரை படிக்கும் பெரிய பள்ளியைக் காணலாம். பெரிய கிராமங்களில் மட்டுமே, சிறிய பள்ளிகளைக் காண இயலும். அதில் வகுப்புகள் ஐந்து. ஆனால் ஆசிரியர் ஒருவரே இருப்பர். "தசாவதானம்" என்று கூறப்படும் திறமை, அவ்வாசிரியர்களுக்குத் தான் பொருந்தும். பள்ளிக்குள் சட்டாம் பிள்ளை இராச்சியம்தான். பள்ளியின் அருகிலுள்ள மரங்களில் அநேகமாய் நேர் கிளைகளைக் காண்பது துர்லபம். காலை முதல் மாலை வரை தண்டனை இருந்துகொண்டே இருக்கும். அடிக்குப் பயந்து பள்ளிக்குப் போவதாய்க் கூறிவிட்டு பக்கத்துப் புன்செயிலோ, தோட்டத்திலோ மறைந்து நின்று பள்ளி நேர முடிவில் வீடுபோய்ச் சேருவதும், அம் மாணவனைத் தந்தையாகிய போலீஸ் பிடித்து, கைதியைப் போல் பள்ளியில் கொண்டுவந்து நிறுத்துவதும், காட்டில் பிடிபட்ட விலங்குபோல அச் சிறுவன் பள்ளிக்குள் காட்சி யளிப்பதும், பின்னர் ஆசிரியர் தனது வஞ்சத்தை அவன் மீது தீர்த்துக் கொள்வதும், நாள்தோறும், நிகழ்ந்த காட்சிகள்.

ஆசிரியரின் அவல நிலமை யாவற்றிலும் பரிதாபகரமானது. பள்ளியில் ஆஜராகும் பிள்ளைகளின் எண்ணிக்கையைப் பொருத்தே அக்கால கிராண்டு நிர்ணயிக்கப்படும். அதிலும் ஆண்டுக் கொருமுறை நடைபெறும் தணிக்கையன்று அம்மாணவன் பள்ளியில் இருக்கவேண்டும். ஆகவே ஆசிரியர் காலை ஆறு மணி முதல் கிராமத்தைச் சுற்றி ஒவ்வொரு வீடாய்ச் சென்று சீடர்களைத் தேடி இழுத்து வரவேண்டும். "வேலப்பா" உன் மகன் ஆண்டி இரண்டு நாட்களாகப் பள்ளிக்கு வரவில்லையே, ஏன்?" இது ஆசிரியர்களின் கேள்வி. "ஆமாங்க! எங்க தோப்பிலே காய் பறிக்கிறுங்க. இன்னும் இரண்டு நாளிலே வந்திடுவான், போங்க, வாத்தியாரய்யா!" இது வேலப்பனின் மறுமொழி. "அதற்கில்லை, இன்று இன்ஸ்பெக்டர் எஜமான் வருகிறார். கட்டாயம் அனுப்பவேண்டும்." "அதெப்படி அவன் உதவி இன்று எங்களுக்கு மிக அவசியம், உங்களுக்காக அனுப்புகிறேன், இன்ஸ்பெக்டர் போன உடனே அனுப்பிடுங்க என்று வேலப்பன் கூறுவான். ஆண் குழந்தைகளின் உதவி, கிராம வாசிகளுக்கு, அதிலும் பயிர்த் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு என்றும் எப்பொழுதும் தேவை. பையனுடைய படிப்பைப் பற்றிச் சிந்திக்கவே நேரம் கிடையாது பெற்றோர்களுக்கு. பெண்களைப் பற்றியோ, கேட்க வேண்டியதில்லை. "அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பு ஏதுக்கடி?" என்பது பாட்டியின் சித்தாந்தம். பையனின் படிப்புக்கே, அக்கரை செலுத்தாத அக்காலத்தில் பெண் கல்வியைப் பற்றி கவலைப்பட்டவர்களே கிடையாது. ஆகவே நூற்றுக்கு ஐந்தோ அல்லது பத்துப் பேரோ இந்தியாவில் படித்தவர்கள் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கும். இந்த ஐந்தும், பத்தும் நகர்ப்புறங்களிலே தான். இந் நிலமையின்தான் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கரையுள்ள பெரியார்கள் அங்கங்கே தோன்றினர். பெருமையோடு, கூறத் தக்கவர்கள், நம் நாட்டிற்கு வந்த மிஷினரிகள்தான். போக்குவரவு வசதிகள் இல்லாத இடங்களிலும் சென்று அங்கங்கே பள்ளிகளைத் திறந்தனர். கிராம மக்களிடம் விழிப்பு ஏற்பட்டது. கல்வி கற்பவர் எண்ணிக்கை கூடிற்று. நாகரீகம் பரவலாயிற்று. அர

சாங்கம் போதிய ஆதரவு கொடுத்தா லொழிய, ஆரம்பக் கல்வி அபிவிருத்தி வெறுங் கனவாகுமென எடுத்துக் காட்டி னர் கோபாலகிருஷ்ண கோகலே போன்ற அறிவாளிகள். அக்கால சட்ட சபைகளில் ஆரம்பக் கல்விச் சட்டம் நிறைவேறியது. கல்வி முறைகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. ஆசிரியர்களுக் குப் பயிற்சி யளிக்கப்பட்டது. அரசாங்க வருமானத்தில் ஆரம்பக் கல்விக்கென அதிகப் பணம் செலவழிக்கப்பட்டது. ஆயினும் கிராமங்கள் கல்வியில் போதிய முன்னேற்றம் அடையவில்லை. முதல் வகுப்பில் சேரும் இருபது பிள்ளைகளில் நான்கு பேர்கள்கூட ஐந்தாவது வகுப்பை எட்டிப் பிடிப்பதில்லை. செல வில் விரயம் ஏற்பட்டது. ஆசிரியரும் அர சாங்கமும் இதைக் தடுக்க கூட்டு முயற் சிகள் எடுத்தனர். ஊக்கமும் ஆர்வமும் உள்ள ஆசிரியர்கள் ஆங்காங்கே சிறந்த பலன்களைக் காணவும் முடிந்தது. ஆனால் பெரும்பாலான முன்னேற்றம் பேனா முனையில்தான் நின்றது. அதாவது புள்ளி விவரங்கள் மிக அழகாக முன் னேறியது. நிலைமை என்னவோ, அசை யாத அம்மியாகவே இருந்தது. இவ்விர யத் தடுப்பு முயற்சி நன்மை தராவிடினும் தீமை உண்டாக்கியது. ஒரு சில இடங் களில் தேக்கம் (stagnation) என்ற நோய் தீர்க்கும் மருந்தாக மாறியது. வகுப்பு மாற்றம், தகுதி புறக்கணிக்கப்பட்டது. பள்ளிகளில் நூற்றுக்கு தொண்ணூற் றைந்தும் சில சமயங்களில் நூற்றுக்கு நூறும் வகுப்புத் தேர்வும் ஏற்படும். அர சாங்கம், ஆசிரியரின் முயற்சியைப் பாராட்டும். ஆனால் ஆசிரியர்கள் பட்ட துயரம் கொஞ்சமல்ல. பழங்கால மாண வர்களின் திறனையும், தன் முன் நிற்கும் பிள்ளைகளின் திறமைக் குறைவையும், எண்ணி ஏங்குவார், வெளியே செல்லவும் வழியில்லை.

இந்நிலையில் பள்ளிக்கு வந்திருப்பவர் களைவிட வரவேண்டியவர்கள், அதிகம் என்று அரசாங்கம் கண்டது. கட்டாயக் கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அமுலும் செய்யப்பட்டது. பள்ளிக்குப் பிள்ளைகளை ஒழுங்காய் அனுப்பாத பெற் றோர்களை தண்டிப்பது, அதன் மூலம் பிள்ளைகளை ஒழுங்காய்ப் பள்ளிக்கு அனுப்ப ஏற்பாடு செய்வதே அதன் நோக் கம். பலனில்லாமல் போகவில்லை. சற்று எண்ணிக்கை உயர்ந்தது. குழுக்கள் அமைக்கப் பெற்றன. அறிக்கைகள் மிகுந்த உழைப்போடு தொகுக்கப் பெற்றன. பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர்கள் குழுக் கூட்டங்களுக்குக் கொண்டு வரப் பெற்று விசாரணை செய்யப் பெற்றார்கள். "படித்து என்ன பலன்? அரை வயிற்றுக் கஞ்சிக்கே ஆலாய் பறக்கிறோம். எங்கள் பிள்ளைகளிடம் வீட்டுக் காரியத்தை விட்டு விட்டு, தோட்டம் துறவுகளுக்குச் செல் கிறோம். எங்களுக்கு ஒத்தாசை செய்யும் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பச் சொல்லி எங்கள் பிழைப்பில் மண்ணைப் போட்டு வயிற்றில் அடிக்கிறீர்களே" என்று வறுமையில் உழலும் பெற்றோர் கள் கதறுகிறார்கள். பெற்றோர்களின் வறுமையும் கல்வியின் இன்றியமையா மையை உணர முடியாத அறியாமை யும் ஆகிய இரண்டும் ஆரம்பக் கல்வியில் அவர்களுக்கு அக்கரை ஏற்பட வொட்டாமல் தடுத்து நிற்கின்றன. இந் நிலையில் கட்டாயக் கல்விச் சட்டம் சார தாச் சட்டத்தை, ஒத்து நின்றது. இந் நிலையில் இந்திய அரசாங்கம் தன் அரசி யல் சட்டத்தில் இந்தியாவில் பிறந்த 7 முதல் 14 வயது வரையுள்ள ஆண் பெண் யாவருக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும். அதுவும் 1960 க்குள் நிறைவேற்றப்படவேண்டும் என்று குறிப்பிட்டது. அதை அடுத்து ஐந்தாண் டுத் திட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. ஆனால் பொருளாதார முன்னேற்றமும் வளமும் கருதியபடி கிட்டவில்லை. நோயொன்றிருக்க, மருந்தொன்று கொடுத்தால் பலன் ஏற்படுமா? இதனை அனுபவ முறையில் அறிந்தவர்கள் அதி கார பீடத்திற்கு வந்தாலல்லது பயன் ஏது?

நமது சென்னை இராஜ்யக் கல்வி இயக் குநர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் அடிப்படையானநோய் வறுமை என்பதை உணர்ந்தார்கள். வயிற்றில் பசி இருக்க காதிலும் மனத்திலும் அறிவு படியுமா? நண்பகல் உணவளிப்பே ஏற்ற மருந்து என்று துணிந்து கூறினார்கள். பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் யாவருக் கும், அரசாங்கச் செலவில் உணவளிப் பது முடியாது. ஆங்காங்குள்ள கிராமங் களில் தனவந்தர்களும் ஊக்கமுள்ள தொண்டர்களும் இருக்கிறார்கள். அணுக வேண்டிய முறையில், காலமறிந்து செய்

தால் ஒரு கல்லில் இரு மாம்பழங்கள் வீழ்த்தலாம் என்று கண்டார்கள்.

இயக்குநர் கருத்தை, மக்களிடம் கூறி காரியம் சாதிக்க வேண்டுமானால் மணியான திறமைசாலிகள் வேண்டும். இவ்விஷயத்தில் நான் பிறந்த திருநெல்வேலி மாவட்டம் நூற்றுக்கு நூறு அதிர்ஷ்டம் வாய்ந்தது என்பதைத் துணிந்து கூறுவேன். தென் திருநெல்வேலிக்கென மணிகளில் ஒருவரான, திரு. K.V.S. மணியன் அவர்கள் ஜில்லாக் கல்வி அதிகாரி ஆவார். ஊக்கமிழந்தவனுக்குங் கூட நமது மணி அவர்களைக் கண்டு பேசினாலே ஊக்கமும், உற்சாகமும், ஒருங்கே எங்கிருந்தோ வந்துவிடும். நண்பகல் உணவு குறிப்பிட்ட ஒரு சிலர் என்பதோடு நில்லாமல் பள்ளிக்கு வரும் யாவருக்கும் அளிக்கப்படும் நாள் தொலைவில் இல்லை என்று நம்பலாம்.

முந்நூறு மக்கள் வாழும் சிற்றூர்களுக்கும், ஓர் பள்ளிகூடம் திறக்க அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது. மக்களும், பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட ஏற்பட கல்வியில் ஆர்வம் காட்டி வருவது கண்கூடு. தீட்டிய குறிக்கோள் அடைய வேண்டுமானால், மனத் திருப்தியோடு வேலை செய்யும் ஊக்கமுள்ள ஆசிரியர்கள் தேவை. ஆரம்ப ஆசிரியர் நிலை கேவலமாக இருந்து வருமானால் கல்வி பரவவோ, பெற்றோர்களது மனநிலையை மாற்றி வழிப்படுத்தவோ ஆசிரியர்களால் முடியாது. ஆதலால் ஆசிரியர் சீரமைப்புத் திட்டமும் தேவை, ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை, சமூகத்தில் அந்தஸ்து முதலியவை எளிதில் கிடைக்க பள்ளி நிர்வாகம், பெற்றோர் குழாம் அரசாங்கம், ஆகியவற்றின் இசைவால், இணைப்பால் அமையுமானால், ஒருவாறு கல்வியின் உச்சவரம்பை எட்ட முடியும். கல்வி முறையை அடிக்கடி மாற்றுமலும், ஆசிரியர்களின் அந்தஸ்தை மேலும் உயர்த்தி, கட்டாயக் கல்விச் சட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விஸ்தரித்து, வேலை செய்வதால் நம் நாடு முன்னேற்ற மடையும். கல்வி முன்னேற்றம்தான், திட்டங்களின் இதர வெற்றிகட்கு அடிப்படையாகும் என்பதைக் கூறிக்கொண்டு, இக் கட்டுரையை வரைவதற்கு எனக்கு ஊக்கமும், வாய்ப்பும் அளித்த திரு. S. நடராஜன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இக் கட்டுரையை முடிக்கிறேன்.

IMPORTANT TO TEACHERS

Besides the "SOUTH INDIAN TEACHER" the official organ of the South India Teachers' Union, every Teacher should read

1. THE AIFEA NEWS BULLETIN

A monthly issued by the All India Federation of Educational Associations, Nagpur. It gives records of activities of affiliated Associations in India and events of importance in the field of Education.

ANNUAL SUBSCRIPTION : Re. 1.50 only.

2. THE PANORAMA

Published by the World Confederation of Organizations of Teaching Profession (WCOTP): 1227, Sixteenth Street, N.W. Washington —6 D.C. U.S.A. **FOUR ISSUES: 2 DOLLARS.**

தென்னிந்திய ஆசிரியர் சங்கம்

1959-60ஆம் ஆண்டு அறிக்கை

1—4—1959 முதல் 31—3—1960 உடன் முடிவுற்ற 51-வது வருடாந்திர அறிக்கையை நிர்வாகக் குழு, சங்கத்தில் பொது சபைக்கு மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறது.

சங்கியை : 12 ஜில்லா ஆசிரியர் சங்கங்கள் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. கன்யாகுமரி ஜில்லாவில் ஆசிரியர் சங்கம் நிறுவப்பட வேண்டும்.

நிர்வாகஸ்தர்கள் : 6—5—1959ல் சேலத்தில் நடந்த பொது சபைக் கூட்டத்தில் 1959—60-ம் வருஷத்திற்கான கீழ்க்கண்ட நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் : ஸ்ரீ டி. பி. சீனிவாச வரதன், **உப தலைவர்கள் :** ஸ்ரீமதி சரஸ்வதி சீனிவாசன், ஸ்ரீ சி. எம். பஸ்லூர் ரஹ்மான், **காரியதரிசி :** ஸ்ரீ ஜி. கிருஷ்ணமூர்த்தி, **கூட்டுக் காரியதரிசி :** ஸ்ரீ எஸ். சுப்பா ராவ், **பொக்கிஷதார் :** ஸ்ரீ பி. வி. ராமசாமி, **உஷார் கமிட்டி :** ஸ்ரீ எஸ். எஸ். நாராயணசாமி (கன்வீனர்) ஸ்ரீ M. சுப்ரமணியம், தூத்துக்குடி. ஸ்ரீ M. கணேசன், மேலூர். ஸ்ரீ R. ஜெகன்னாதன், சென்னை. ஸ்ரீ M. சுப்ரமணி, ஆரணி: அங்கத்தினர்கள்.

நிர்வாகக் குழு : சங்கத்தின் நிர்வாகக் குழு 18—4—1959-ல் சென்னையிலும், 3—5—1959-ல் சேலத்திலும், 27—6—59, 26—9—59, 5—12—59 தேதிகளில் சென்னையிலும் ஆக 5 தடவைகள் கூடி கீழ்க்கண்ட அலுவல்களை நடத்தியது.

(1) வருஷாந்திர அறிக்கையை நிறைவேற்றியது. (2) காரியக் கமிட்டிக்கு அங்கத்தினர்களை தேர்ந்தெடுத்தது. (3) 29-வது தென்னிந்திய கல்வி வாரக் கொண்டாட்டம். (4) 50-வது சென்னை ராஜ்யக் கல்வி மகாநாட்டிற்கான ஏற்பாடுகள். (6) தென்னிந்திய ஆசிரியர் சங்க கல்வி ஆராய்ச்சிக் குழுவிற்கு பிரதிநிதிகள் தேர்வு. (6) முக்கியமான விஷயங்களை ஒட்டி கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை ஆராய்ந்தது.

காரியக் கமிட்டி : காரியக்கமிட்டி 27—6—59-ல் கூடி ஸ்ரீ C. ரங்கநாத ஐயங்காரை பத்திரிகை காரியதரிசியாகவும், ஸ்ரீ V. பூவராகமூர்த்தியை உதவி பத்திரிகை காரியதரிசியாகவும் தேர்ந்தெடுத்தது. 1959—60-க்கான வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றியது.

சென்னையிலுள்ள காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் 21—2—60-ல் கூடி 50-வது சென்னை ராஜ்ய கல்வி மகாநாட்டிற்கு தலைவர் தேர்ந்தெடுத்தல் சம்பந்தமாக வந்த ஒட்டுப் பதிவுகளை பரிசீலனை செய்ததுடன் சங்கத்தின் நிர்வாக சம்பந்தமான விஷயங்களையும் ஆராய்ந்தது.

49-வது சென்னை ராஜ்ய கல்வி மகாநாடு : மகாநாடு 4—5—59 முதல் 6—5—59 முடிய சேலத்தில் Dr. A. ராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் நடந்தது.

ஸ்ரீ K. சந்தானம் மகாநாட்டைத் துவக்கி வைத்தார். ஸ்ரீ P. ரத்னசாமி பிள்ளை, வரவேற்புக் கமிட்டித் தலைவர், வரவேற்புரையை நிகழ்த்தினர்.

மகாநாட்டை யொட்டிய கண்காட்சியை ஸ்ரீ S. நடராஜன் திறந்து வைத்தார்.

மைலாப்பூர் பி. எஸ். உயர்தரக் கலாசாலையைச் சேர்ந்த ஸ்ரீ G. சீனிவாஸாசாரி அவர்கள் சபேசன் ஞாபகார்த்த உரையை நிகழ்த்தினர்.

கீழ்க்கண்ட பிரிவுகளின் மகாநாடுகள் நடைபெற்றன.

1. ஆரம்ப ஆதாரக் கல்விப் பிரிவு.

தலைவர் - ஸ்ரீ A. குழந்தைவேலு முதலியார், ராமகிருஷ்ண மிஷன் ஆசிரியப் பயிற்சி கல்லூரி, பெரியநாயக்கன்பாளையம்.

2. செகண்டரி, நுட்பக் கல்விப் பிரிவு.

தலைவர் - ஸ்ரீ C. M. பஸ்லூர் ரஹ்மான்.

கன்வீனர் - ஸ்ரீ A. K. சீதாராமன்.

3. பல்கலைக் கழகப் பிரிவு.

தலைவர் - Prof. R. கிருஷ்ணமூர்த்தி.

கன்வீனர் - ஸ்ரீமதி காமாக்ஷி குமாரசாமி.

4. நிர்வாகம், செயல்முறை, ஆசிரியர் பயிற்சிப் பிரிவு.

தலைவர் ; ஸ்ரீமதி ஸரஸ்வதி சீனிவாசன்.
கன்வீனர் - G. சுந்தரம்.

5. வகுப்பு ஆசிரியர் பிரிவு.

தலைவர் - ஸ்ரீ M. அருணாசலம்.

6. ஆரம்ப ஆசிரியர் மகாநாடு

தலைவர் - ஸ்ரீ R. M. கணபதி.

கன்வீனர் - Right Rev. V. S. செல்வ நாதர், சேலம் பிஷப்.

முதல் நாள் மாலை ஆரம்ப ஆசிரியர்கள் மகாநாட்டுடன் ராஜ்யக் கல்வி மகாநாடு ஆரம்பமாயிற்று.

34-வது அகில இந்திய கல்வி மகாநாடு: Dr. சித்தாந்தா, கல்கத்தா சர்வகலாசாலை உப அத்யட்சகர் அவர்கள் தலைமையில் ஜபல்பூரில் நடந்தது. நமது சங்கத்தின் பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்துகொண்டார்கள்.

29-வது தென்னிந்திய கல்வி வாரம்: ராஜ்யம் பூராவிலும் 19—10—59 முதல் 25—10—59 முடிய கல்வி வாரம் கொண்டாடப்பட்டது. Dr. A. லக்ஷ்மணசாமி முதலியார் உப அத்யட்சகர், சென்னை சர்வகலாசாலை, தென்னிந்திய கல்வி வாரக் கமிட்டியின் தலைவராக இருந்தார். ராஜ்யத்திலுள்ள அநேக ஆசிரிய சங்கங்களிலிருந்து கல்வி வாரக் கொண்டாட்டத்தைப் பற்றின அறிக்கைகள் வந்து சேர்ந்தன. இந்த வருடம், தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் மைலாப்பூர் P. S. High School-ல் கல்வி வாரமானது, ஹிந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்ரீ S. பாலகிருஷ்ண ஜோஷி அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது.

ஜில்லா ஆசிரியர் கில்டுகள்: ஜில்லா கில்டுகளிடமிருந்து வருஷாந்திர கூட்டங்களின் அறிக்கைகளும், இதர நடவடிக்கைகளின்விபரங்களும் அவ்வப்போது கிடைத்தன.

தென் ஆற்காடு ஜில்லா கில்டை இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பத்திரிகைகள்: 'தென்னிந்திய ஆசிரியர்' பத்திரிகையின் பொருளாதார நிலை திருப்திகரம் என்று சொல்லலாம். ஆனால் 'பாலர் கல்வி' யின் பொருளாதார நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. சந்தாதார்கள் எண்ணிக்கையும் குறைந்து விட்டது.

சந்தாதார்கள் அதிகம் சேர்ந்து. 'பாலர் கல்வி' யில் அதிகமான சிரத்தை கொண்டாலொழிய அதைத் தனிப் பத்திரிகையாகப் பிரசுரிப்பது அசாத்தியமாகும் ஸ்ரீ ரங்கநாத ஐயங்கார், ஸ்ரீ பூவராகவ மூர்த்தி இவர்கள் இப்பத்திரிகைகளின் பொறுப்பை ஏற்றி நடத்தினர். அவர்களுக்கு இச்சங்கத்தின் நன்றி உரித்தாகுக.

தென்னிந்திய ஆசிரியர் சங்க சகாயநிதி: நிதி ஆரம்ப நிலையில் இருந்ததுபோல் அவ்வளவு விருத்தியடையவில்லை. ஆசிரியர்கள் கஷ்ட நிவாரணத்திற்காகவும் அவர்களைச் சார்ந்தவர்கள் உதவிக்காகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்நிதி சரிவர பணியாற்ற வேண்டுமென்றால், வருடத்திற்கு நான்கு அணாவே கொண்ட சந்தாவை எல்லா ஆசிரியர்களும் வருடா வருடம் தவறாமல் செலுத்த வேண்டும்.

இவ்வருடத்தில் திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் ஸ்ரீ M. G. ராமச்சந்திரனுக்கு ரூ. 25 இந்நிதிலிருந்து அளிக்கப்பட்டது.

தென்னிந்திய ஆசிரியர் சங்க பிரசுராலயப் பிரிவு: இதன்கீழ் இரண்டு புதுப் புத்தகங்கள் பிரசுரிக்கப்பட்டன. (1) பராமரிப்பு ஆட்சி. (2) அண்டையார் சினார்.

புத்தகங்களை அங்கத்தினர்கள் வாங்கி ஆதரவு அளித்தால், அதிக புத்தகங்கள் பிரசுரிக்க உதவியாக இருக்கும்.

1958-ம் ஆண்டு கிடைத்த சிறு இலாபத் தொகையிலிருந்து 36 ரூபாய் தென்னிந்திய ஆசிரிய சங்கத்திற்கு அளிக்கப்பட்டது.

தென்னிந்திய ஆசிரியர் சங்க ஆராய்ச்சிக் குழு: இதன் ஆதரவில் சமூகபாடத்தில் இரண்டு கருத்தரங்குகள் நடத்தப்பட்டு, சமூக பாடத்தை ஒட்டி செய்யக்கூடிய செயல்களைப் பற்றின அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

5, 6 பார மாணவர் கஷ்டங்களை ஆராய்வதற்காக வட்டங்களைப் பற்றின சோதனைத் தாள் தயார் செய்யப்பட்டது. அதை மாணவர்களுக்குக் கொடுத்து அதன் முடிவை இரண்டாவது அறிக்கை மூலம் வெளியிடப்பட்டது.

அமெரிக்க Ford ஸ்தாபனத்தார் 8000 டாலர் உதவித் தொகையை வகுப்பறை பிரச்சினைகளை ஆராய்வதற்காக 3 வருட காலத்தில் பெறும்படி அளித்துள்ளார்கள்.

ஆசிரியப் பயிற்சி முடிந்து வெளிவரும் பயிற்சி மாணவ மாணவிகளுக்கு ஆங்கிலத்தில் பாஷா ஞானம் அடைவதற்கான ஒரு பயிற்சியை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கல்வியின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ளோரின் ஒத்துழைப்பினால் இப்பகுதி நல்லதொரு பணி ஆற்றலாமென்ற நம்பிக்கை யிருக்கிறது.

ஆசிரியர்களுக்கான தேசியப் பரிசு: இவ்வாண்டு கோயம்புத்தூரைச் சேர்ந்த ஸ்ரீ சின்னசாமி அவர்களும் ஆசிரிய சங்கத்திற்காக அரும்பணி யாற்றிய குலசேகரப் பட்டினம் ஸ்ரீ N. வெங்கடாசலமய்யங்காரும் ஆசிரியர்களுக்கான தேசியப் பரிசைப் பெற்றுர்கள். தென்னிந்திய ஆசிரிய சங்கத்துடன் இருவரும் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். ஆதலின் இச் சங்கம் அவர்களுக்குக் கிடைத்த கௌரவத்தைப் பற்றி பெருமை கொள்கிறது, பாராட்டுகிறது.

பார்வையாளர்கள்: 6 பேர் அடங்கிய ரஷ்ய கல்விக் கோஷ்டி ஒன்று சங்கக் காரியாலயத்திற்கு விஜயம் செய்து நம் சங்க நடைமுறைகளைப் பற்றியும் அவர்களுடைய சங்கங்களையும் பற்றியும் விவாதித்தது.

16 பேர் அடங்கிய மலேயாவில் உள்ள தமிழ் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் ஒரு மாத காலம் நம் விருந்தினர்களாக இருந்தார்கள். சென்னையில் நம் அலுவலகத்தில் தங்கி யிருந்தார்கள். தென்னிந்தியாவில் அநேக இடங்களைச் சுற்றிப் பார்த்தார்கள். அவர்களுக்கு ஒரு தேநீர் விருந்து நடத்தப்பட்டது.

உலக ஆசிரியர் குழு, அகில இந்திய ஆசிரியர் குழு, தென்னிந்திய ஆசிரியர் சங்கம்: தலைவர் ஸ்ரீ T. P. ஸ்ரீனிவாசவரதன், பத்திரிகை காரியதரிசி ஸ்ரீ C. ரங்கநாத ஐயங்கார் அவர்கள் இருவர் மூலமாக அகில இந்திய ஆசிரியர் குழுவுடனும், ஸ்ரீ S. நடராஜன் மூலமாக உலக ஆசிரியர் குழுவுடனும் தொடர்புகொள்ளும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஸ்ரீ S. நடராஜன் உலக ஆசிரியர் குழுவின் உபதலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர். அது நமக்கு பெரு மகிழ்ச்சி யளிப்பதோடு நமக்கு கௌரவத்தையும் அளிக்கிறது. அவர்கள் உலகில் பல நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து கல்வித் துறைக்குப் பாடுபட்டு வருகிருர். அவருடைய ஆழ்ந்த அனுபவமும், தீர்ந்த அறிவும் நமக்கும் நம் ராஜ்ய சர்க்காருக்கும் பயனளிக்கும் என நம்புகிறேம். உலக ஆசிரியர் குழுவின் அடுத்த மகாநாடு இந்தியாவில் 1961-ல் கூடவிருக்கிறது.

1959-ம் வருடம் அக்டோபர் மாதம், பிரிட்டிஷ் கௌன்சில் அழைப்பின் பேரில் ஸ்ரீ T. P. ஸ்ரீனிவாச வரதன் அவர்கள் U.K. சென்றுர். அங்கு தங்கின 7 வாரத்தில், பலதரப்பட்ட பள்ளிகளையும், கலாசாலைகளையும் பார்வையிட்டதோடு, ஆசிரியப் பயிற்சியைப்பற்றியும், பள்ளி நிர்வாசத்தைப்பற்றியும் ஆராய்ந்தார். ஆசிரிய கங்கத்தலைவர்களைப் பேட்டி கண்டு ஆசிரியர் நிலையைப்பற்றி அறிந்தார். அவருடைய அனுபவம் கல்வித் துறையிலும் ஆசிரிய சங்கங்களுக்கும் பெரிய வழிகாட்டியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நடைமுறை ஆண்டில் தலைவரால் செய்யப்பட்ட அலுவல்கள்:

1. சேலத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அரசாங்கத்தாருக்கு முக்கிய குறிப்புகளுடன் அனுப்பப்பட்டது. அதில் ஒன்று சம்பள திட்டத்தை சம்பள பரிசீலனைக் குழுவுக்கு சமர்ப்பித்தது.

2. பள்ளியில் வேலை செய்துவரும் குமாஸ்தாக்களுக்கும், ப்யூன்களுக்கும் கொடுக்கப்படும் குறைந்த சம்பளத்திட்டத்தைப் பற்றி பரீசீலனைக் குழுவுக்கு எடுத்து சொல்லப்பட்டது.

3. சர்க்கார் திட்டப்படி சில முனிசிபாலிடிகளிலும், ஸ்தலஸ்தாபனப் பள்ளிகளிலும் ஆசிரியர்களுக்கு சம்பளம் இன்னும் கொடுக்கப்படவில்லை. இதை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டது.

4. 1959-ம் வருடம் மே மாதம், ஆரம்பப் பள்ளியிலிருந்து வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு வேறு பள்ளியில் வேலை வாங்கித் தருவதோடு, வேலையில் சேரும்பொழுது அவர்கள் வாங்கிவந்த சம்பளத்தையே கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

5. கீழ்க்கண்டவை பற்றி அரசாங்கத்தாருக்கு சிபாரிசு செய்யப்பட்டது.

(a) ஆசிரியர் மாணவர் விகிதம் 1-25 ஆக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

(b) பள்ளியில் நியமிக்கப்பட்டிருக்கும் செகன்டரி கிரேட் ஆசிரியர் எண்ணிக்கை எவ்விதமிருந்தபோதிலும் ஆரம்பப்பள்ளியில் வேலை செய்யும் எல்லா செகன்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் செகன்டரி கிரேட் சம்பளத் திட்டம் கொடுக்கப்பட வேண்டும்.

(c) ஹையர் கிரேட் பயிற்சிபெற்ற ஆசிரியர் T.S.L.C. பரிக்ஷை தேர்வுபெற்ற மறுதினம் முதல் செகன்டரி கிரேட் ஆசிரியர் சம்பள விகிதம் அளிக்கப்பட வேண்டும்.

6. சம்பளம் வசூலிக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் அவைகளின் கணக்குகளை பரிசீலனை செய்த பின் உதவித்தொகை அளிக்கப்படவேண்டும்.

7. சம்பளம் வசூலிக்கும் பள்ளிகளிலிருந்து வேலையிலிருந்து அனுப்பப்பட்ட ஆசிரியர்களுக்கு வேலையில்லாத காலத்

திற்கு சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று மறுபடியும் வற்புறுத்தப்பட்டது.

8. வேலையிலிருந்து அனுப்பப்பட்ட ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு, அவர்களுக்கு வேலை கிடைக்காத காலத்திலும், அவர்கள் குழந்தைகளுக்குச் சம்பளச் சலுகைகள் காண்பிக்கப்படவேண்டும்.

9. (a) சம்பளம் வசூலிப்பதை நிறுத்தி சம்பளம் வசூலிக்காத பள்ளிகளாக மாறிய பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு Money Order கமிஷனைப் பிடித்து கொள்ளாமல் பூரா சம்பளமும் கொடுக்கப்படவேண்டும்.

(b) இம்மாதிரியான சம்பளம் வசூல் செய்யாத பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு கீழ்க்கண்ட முறைப்படி சம்பளத் தொகை நிர்ணயிக்கப்படவேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டது.

1947-ம் வருடத்திற்கு முன் வேலைசெய்த வருடங்களுக்குத் தக்கவாறு சம்பள உயர்வும், 1947-ம் வருடத்திலிருந்து வருடாந்திர சம்பள உயர்வையும் கொடுத்து சம்பளத்தை நிர்ணயித்து இத்தொகைக்கும் இப்பொழுது கொடுக்கப்படும் சம்பளத்திற்கும் உள்ள வித்தியாசத்தை Personal pay ஆக கொடுக்கவேண்டும்.

(c) 1-6-59 முதல் நேரடியாக சம்பளம் பெறும் உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் படி கொடுக்கப்படவேண்டும்.

(d) பிடிக்கப்பட்ட Money Order கமிஷனை ஆசிரியருக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும்.

10. சம்பளம் வசூல் செய்யும் பள்ளிகளில் தொடர்ந்து வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு குறைவான சம்பள விகிதம் கொடுக்கப்படுகிறது என்று அரசாங்கத்தாருக்கு எடுத்து சொல்லப்பட்டது.மேலும் இம்மாதியான பள்ளிகள் குறைந்தபக்ஷ சம்பள விகிதப்படி ஆசிரியர்களுக்கு கொடுக்காவிட்டால் அவைகளுக்கு அரசாங்கம் அங்கீகாரம் அளிக்கக் கூடாதென்று சிபாரிசு செய்யப்பட்டது.

11. தென் ஆற்காடு ஜில்லாவில் ஸ்தல ஸ்தாபன பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு அவர்கள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து சம்பள உயர்வு கொடுக்கப்படவேண்டும் என்று அரசாங்கத்தார் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

12. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் சம்பள விகிதம் உயர்த்தப்படவேண்டும் என்று அரசாங்கத்தாருக்கு மறுபடியும் மறுபடியும் எடுத்துக் காட்டப்பட்டது.

13. அங்கீகாரம் பெற்ற ஆரம்பப்பள்ளியில் வேலைசெய்யும் ஆசிரியர்களுக்கும் சட்டசபையின் ஆசிரியத் தொகுதிக்கு பிரிதிநிதி தேர்ந்தெடுப்பதற்கு வாக்குரிமை அளிக்கப்படவேண்டும்.

14. ஓய்வு பெற்ற ஆசிரியர்களை 60வயது வரையில் மறுபடியும் வேலையில் அமர்த்திக் கொள்ளவேண்டும் என்று திண்டுக்கல் பிஷப் கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆர்ச் பிஷப்புக்கு இந்த விஷயம் அனுப்பப்பட்டிருக்கிறது என்ற பதில் கிடைத்தது.

15. பள்ளிக்கூடங்களையும், பாட புத்தகங்களையும் தேசீய மயமாக்கக்கூடாது என்ற சங்கத்தின் கொள்கை அறிவிக்கப்பட்டது.

16. 55 வயதிற்குப் பின்னல் ஆசிரியர் பதவியில் இல்லாமல் இருந்த காலத்தை விலக்களித்து பென்ஷன் விதிகள் திருத்தியமைக்கப்படவேண்டும். (இது அரசாங்கத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.)

17. பென்ஷன் பெறும் ஆசிரியர்கள் மறுபடியும் பள்ளிகளிலோ, அரசாங்கத் துறையிலோ வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டால் அவர்கள் கடைசியாக வாங்கிய சம்பளத்திற்கு மேல் மொத்த வருமானம் பெறுவிட்டால் அவர்கள் பென்ஷன் தொகையையும் பெறுவதற்கு அனுமதிக்கபடவேண்டும்.

18. எல்லா ஆசிரியர்களுக்கும் 1-4-55 முதல் பென்ஷன் வசதி மறுக்கப்பட்டதால் 1-4-55 முதல் 1-4-58 க்குள் ஓய்வுபெற்ற L. T. ஆசிரியர்கள் முதல் கிரேட் பண்டிதர்கள், Physical Director கள் சம்பந்தப்பட்ட வரையில் 1-4-58 முதற் கொண்டாவது பென்ஷன் கொடுக்கப்படவேண்டும் என்று 1959 செப்டம்பர் மாதம் அரசாங்கத்தார் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

19. 55 வயதிற்கு முன் மூன்று வருஷங்களுக்கு பெற்ற சராசரி சம்பளத் தொகையும் அல்லது ஓய்வு பெறுவதற்கு முன் பெற்ற சம்பளமும் எது அதிகமாக உள்ளதோ அதைக் கணக் கெடுத்து அதில் 25% தொகையை பென்ஷனகக் கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டது.

20. 60 வயதுக்குமுன் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், 60 வயது அடைந்த பிறகு தான் பென்ஷன் பெற அனுமதிக்கப்படுவார்கள் என்ற Accountant Generalன் விளக்கம் சரியில்லை என்று எடுத்துக் காட்டப்பட்டது. இதற்கு அரசாங்கத்தாரின் உத்திரவு எதிர்பார்க்கப்படுகிறது.

21. 1959 மார்ச்சு மீ S.S.L.C. பரீக்ஷையில் சமூக பாடப் பிரிவில் ஏற்பட்ட திடுக்கிடத்தக்க தோல்வியின் காரணங்களை பரிசீலித்து, பலனை விருத்தி செய்ய தகுந்த நடவடிக்கைகளை அரசாங்கத்தார் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

22. கல்வித்துறை அமைச்சரை சங்கத் தலைவர் நேரடியாகப் பார்த்து கோடம்பாக்கம் Modern High Schoolன் நிலைமையை எடுத்துக் கூறி, அவை சீர்படுத்தப்பட வேண்டுமென்றும், எட்டு மாதங்களுக்கு மேல் கொடுக்கப்படாத சம்பளத்தை கொடுக்க வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது. சென்னை தென் மண்டல கல்வித்துறை அதிகாரி ரிசீவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

23. மதுரையிலுள்ள Labour Welfare பள்ளிகளின் ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டதை அரசாங்கத்தாருக்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

24. ஐந்து மாத காலத்திற்குமேல், ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லையாதலால், மந்திரமூர்த்தி உயர் நிலைப்பள்ளியின் ஆசிரியர்களுக்கு,கல்வித்துறை அதிகாரியின் மூலம் சம்பளம் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று, Secretary Education Deptஐயும், Dy. Director of Education ஐயும், தலைவர் கேட்டுக்கொண்டார். அரசாங்கத்தார் இதன் பேரில் நடவடிக்கை எடுத்தார்கள். மேலும் தஞ்சாவூர் கல்யாண சுந்தரம் High School ஆசிரியர்களுக்கு 4 மீ காலங்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை என்றும் அரசாங்கத்தார் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

25. ஆசிரியர்களுக்கும், மானேஜ்மெண்டாருக்குமிடையே உள்ள agreementல் ஏற்படும் திருத்தங்கள் அவ்வப்போது சேர்க்கப்பட வேண்டும் என்று கல்வித்துறையிலிருந்து சுற்றறிக்கை விடப்படாததால், அநேக ஆசிரியர்கள் அவர்கள் பக்கம் நியாயமிருந்தும், அவதிப்பட்டார்கள் என்று அரசாங்கத்தாரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

26. வாழ்க்கைப் புள்ளி அதிகமாகிக் கொண்டே வருவதால், பஞ்சப்படியை உயர்த்தி இடைக்கால நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

27. அத்தியாவசியமான பண்டங்களின் விலை உயர்வைத் தடுத்து, விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்று அரசாங்கத்தார் வற்புறுத்தப்பட்டார்கள்.

28. Intermediate பரீக்ஷையில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் தொடர்ந்தால் போல் மூன்று வருஷ பட்டப் படிப்பின் பாகங்களின் பரீக்ஷைகளுக்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும், ஆனால் இரண்டு வருஷங்களுக்கு பிறகுதான் பட்டம் பெற வேண்டுமென்றும் மதராஸ் சர்வகலாசாலை வேண்டிக்கொள்ளப்பட்டது.

29. 15-12-1959ல் தென்னிந்திய ஆசிரிய சங்கத்தின் சேலம் மகாநாட்டில் நிர்ணயிக்கப்பட்ட சம்பள விகிதங்கள், சங்கப் பிரதிநிதிகளால் சம்பளப் பரிசீலனைக் குழுவின் முன் விரிவாக எடுத்துவைக்கப்பட்டது.

முடிவுரை

தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் அலுவல்கள் பெருமளவில் அதிகரித்துவிட்டது. இணைக்கப்பட்ட ஆசிரியர் கில்டுகளில் சேரும் ஆரம்ப பள்ளியின் ஆசிரியர் தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. 1952ல் அளிக்கப்பட்ட அங்கீகாரத்தினால், சங்கமானது, ஆசிரியர்களின் குறைகளை அரசாங்கத்தாருக்கு எடுத்துக் கூறும் முக்கிய பிரதிநிதித்வம் வாய்ந்ததாக இருக்கிறது. இதனால் அலுவலகத்தில் வேலை பளுவும் மிக அதிகரித்துவிட்டது. வெள்ளை அறிக்கையில் உள்ள சிபார்சுகளை அமுல் நடத்துவதில் அரசாங்கத்தார் இந்த வருஷத்தில் தீவிரமாக ஈடுபட்டார்கள். Grant-in-aid Codeஐ திருத்துவதிலும், செகன்டரி கல்வியைத் திருத்தி அமைப்பதிலும், சில ஆரம்ப பள்ளிகள் சம்பளம் வசூலிக்கும் பள்ளிகளாக மாறியதனால் உண்டான ஆசிரியர் குறைப்பும் சங்கத்தின் நிர்வாகக் குழுவின் கவனத்தைக் கவர்ந்தது.

மேலும் மானேஜ்மெண்டாரிடம் சரிவர நியாயம் பெறாத ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. சில ஆசிரியர்கள் மோசமான பொருளாதார நிலையினால் கஷ்டப்பட்டார்கள்.ஆசிரியர்களின் சகாய நிதிக்கும் சரியானபடி உதவி கிடைக்கவில்லை. இதனால், நோயுற்ற ஆசிரியர்களுக்கு உதவி அளிக்கும் சக்தியும், சங்கத்திற்கு குறைந்துவிட்டது.

ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் சங்கத்தின் காரியதரிசி, பொது சபையில் முடிவான (முக்கியமாக பாட புத்தகங்களை தேசிய மயமாக்குவது பற்றியும் மற்றும் உள்ள) கருத்துக்களுக்கு மாறான கருத்துக்களை மேற்கொண்டதால் இந்த வருஷம், நிர்வாகத்திற்கு மிகுந்த சிரமம் ஏறபட்டது.

ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் தனது கருத்துக்களை மேற்கொள்ள உரிமை இருந்தபோதிலும், ஒரு சங்கத்தின் நிர்வாகஸ்தர் என்ற முறையில் அவர்

அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளுக்கு இணங்கி நடக்கவேண்டும்.

கல்வித் துறையின் விரிவின் ஏற்பாடு களில் பொதுவான ஆர்வமிருக்கிறது. ஆசிரியர்களின், நிலைமை உயர்த்தப் பட வேண்டும் என்ற உணர்ச்சி அதிக மாகிக்கொண்டே வருகிறது. இக்காலத் தில், சங்கத்தின் ஒருமுகப்பட்ட நடவடிக் கையும், கண்காணிப்பும் மிகவும் தேவை. அங்கத்தினர்களுக்கு நேர்முகமாக சேவை செய்யவும் பொருளாதாரத் துறை யில் நல்ல நிலைமையும் ஏற்பட சங்கத்தின் சட்டங்கள் திருத்தி அமைக்கப்படவேண் டியிருக்கலாம். ஆசிரியர்களின் பிரச்னை கள் சட்ட நுட்ப பிரகாரம் ஆராயவேண்டி யிருப்பதால், சங்கத்தில் ஒரு சட்ட பிரிவு ஏற்படவேண்டி யிருக்கும். ஆசிரியர்களை வயது காலத்தில் கவனித்துக்கொள்ளவும், சேவை காலத்தில் மரணமடையும் ஆசிரி யர்களின் குழந்தைகளின் பாதுகாப்பிற் கும், ஆசிரியர்களின் நோய்வாய்ப்படும் பொழுது அவர்களுக்கு உதவி செய்யவும், ஒரு க்ஷேம நல இலாகா ஏற்படவேண்டும்.

ஆசிரியர்கள், கல்வியின் தரம் பொது வாகக் குறைந்துகொண்டே வருவதை கவனிக்காமல் இருக்க முடியாது. பள்ளிக் கூட மாணவர்களின் எண்ணிக்கை அதி கரித்துக்கொண்டே வருவதால் ஆசிரியர் களின் வேலைப்பளு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

பள்ளிக்கூட அபிவிருத்தி, பகல் உணவு, குழந்தைகளின் ஆரோக்கியம் முதலி யவை ஆசிரியரின் கவனத்திற்குரியவை. அதோடுகூட போதனு முறைகளைப் பற்றி யும் ஆசிரியர்கள் சிந்திக்கவேண்டி யிருக் கிறது. தென்னிந்திய ஆசிரியர் சங்கம், ஆசிரியர்களின் உத்தியோகத்தையும், சம் பளம், க்ஷேமலாபங்கள் முதலியவற்றைப் பொறுத்த பிரச்னைகளையும் முக்கியமாக கவனிக்க வேண்டியதாயிருக்கிறது. வருகிற வருஷத்தில் ஆசிரியர்கள் மிகவும் ஜாக்கி ரதையாகவும், ஒற்றுமையுடனும், ஒழுக்க முள்ளவர்களாகவும் இருக்க வேண்டிவர்க ளாவார்கள்.

தென்னிந்திய ஆசிரியர் சங்கம் மேன் மேலும் விருத்தியடைந்து அதன் அங்கத்தி னர்களுடைய உரிமைகளையும் அந்தஸ் தையும், ஆசிரிய உலகின் உன்னத நோக்கங்களையும் நிலைநாட்டி, கல்வியின் முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து பணி செய்துவரும் என்று நம்புகிறோம்.

50th MADRAS STATE EDUCATIONAL CONFERENCE, MATHURAI

DRAFT RESOLUTIONS

1. This Conference resolves to request the Government to adopt the scales of pay recommended by the South India Teachers' Union.

2. This Conference reiterates its view that nationalization of text books is against the interests of education and development of the nation.

3. This Conference reiterates that the pension rate should be one-third of the average salary drawn during the last three years before the age of superannuation or the last three years of service whichever is higher.

4. This Conference resolves that the teachers of all grades shall be granted increments during their extension period so as to enable them to get their maximum pay before they retire.

5. This Conference resolves that the fee concessions granted to N.G.O's. and teachers be extended to teachers employed in colleges on similar conditions.

6. This Conference reiterates its request to Government to fix the age of retirement at 60 for all teachers under all managements.

7. This Conference requests the Government to introduce uniform leave rules to be followed by the different managements and see that the managements conform to them.

8. This Conference requests that the Government must pay allowance to the Headmasters of all the elementary schools without showing any discrimination.

9. This Conference resolves to request the Department, the Government, and the University to permit experienced graduate teachers of not less than 15 years standing also to handle the XI Standard in Higher Secondary schools.

10. This Conference resolves to request the Government to permit all teacher-pensioners to draw their pension during the period of re-employment in Government service or schools subject to the condition that the total emoluments do not exceed the last pay drawn.

11. This Conference resolves to request the Government to extend educational concession to children of the teaching and non-teaching staff up to the college level.

12. This Conference resolves to request that a clerk may be allowed in an elementary school with over 350 strength and a peon with a strength of 250 pupils.

13. This Conference resolves that an advance payment of two months' salary be made to teachers for Deepavali and Pongal festivals and the same recovered in ten monthly instalments as in the case of N.G.O's.

14. This Conference views with deep regret that inspite of frequent requests to Government to grant house rent allowance to teachers nothing has been done so far. This Conference presses the need for granting house rent allowance without further delay.

15. This Conference requests the Government to amend the Provident Fund Rules so that a teacher's contribution should be not less than 10 nP. in the rupee and the management and the Government should each be made to contribute 5 nP. in the rupee and the Government's contribution should be made at the end of each year. This Conference further requests the Government to permit the teachers to contribute up to 15 nP. in the rupee.

16. This Conference appreciates the assistance given for meeting the travel costs when teachers and students go on excursion and it requests that the grants may be made liberal to cover incidental and other necessary expenses.

17. This Conference resolves to request the Government to include all elementary school teachers in the Teachers' Constituency of the Madras Legislative Council.

18. This Conference resolves to request the Government to adopt a building scheme for teachers to build their own houses at the places where they serve and also help managements to build residential quarters for teachers and clerical staff.

19. This Conference reiterates its request to Government to grant free medical aid to teachers under all agencies on lines similar to those granted to Central Government employees.

20. This Conference resolves to request the Government to adopt the pupil-teacher ratio 25 : 1 in all elementary schools.

21. This Conference requests the Government to give effect to the pension scheme to all retired teachers— even to those who retired before 1st April 1955.

22. This Conference requests the Government to allow secondary grade scale of pay to such of the higher grade teachers of all agencies as pass the secondary grade training, as this will act as an incentive to such teachers to improve their profesional qualification which in turn will bring greater efficiency in the method of teaching.

23. This Conference requests the Government of Madras to allow the scale of pay of secondary grade teachers to elementary school teachers of all agencies who passed T.S.L.C. examination from the next day after the last day of the T.S.L.C. examination.

24. This Conference resolves to request the Government to enable the Department of Extension Services in the State to pay Travelling Allowance and Daily Allowance to the participants of the Seminar, Refresher Courses, etc. conducted by them.

25. This Conference resolves to request the Government to provide rules for the security of service for the members of the non-teaching staff (clerks, attenders, etc.) in aided schools.

26. This Conference resolves to request the Government to sanction at least one post of upper division clerk in aided high schools for every 500 pupils and part thereof and a manager where the strength exceeds 1,500.

27. This Conference requests the Madras and Annamalai University authorities to introduce Agriculture group and Commerce group in the Pre-university course.

28. This Conference resolves to requests the Government to extend the pension-cum-insurance scheme to the non-teaching staff.

29. This Conference is of opinion that the syllabus in the subjects of Mathematics, Science and Social Studies for Secondary schools are ambitious and need revision.

30. This Conference urges upon the Government that for ensuring the progress of education, a State Board of Education consisting of representatives of the Legislatures and the organised teaching profession be set up.

31. This Conference further requests that with a view to stepping up the quality of education in our elementary schools and at the same time ensure the fulfilment of the constitutional directive in regard to the introduction of Free Compulsory Education an autonomous Council of Elementary Education be set up for this State with representatives of the Education Department, Local Bodies and the organised teaching profession to undertake programmes of in-service training for teachers in elementary schools, to study problems connected with elementary education, to periodically review the progress and advise Government on measures to be taken for ensuring qualitative and quantitative improvement in elementary education.

32. This Conference resolves to request the Government to lay down as its policy that before 1st April 1961, every aided elementary school should have a committee of management registered under the Societies Registration Act, as one of the conditions of recognition.

33. As English is to be taught in Standard V from 1960-61 and as there are a number of higher grade trained teachers with completed S.S.L.C. with more than fifteen years of service, this Conference is of opinion that such teachers should be given refresher course in the content of English and also in the teaching of English, so that their experience, and enthusiasm may be properly canalized for the benefit of the pupils. This will be an incentive to self-study and improvement professionally. Such teachers after undergoing the course successfully should be placed on a par with secondary grade teachers as regards pay and other privileges.

34. This Conference is of opinion that completed S.S.L.C.'s with higher grade training may be permitted to appear privately for the T.S.L.C. examination.

35. This Conference is of opinion that the selection of text-books in the case of municipal elementary schools, should be entrusted to a committee of headmasters of elementary schools, constituted for each Municipality.

36. This Conference impresses on the government the need for constituting a statutory salary negotiating committee, like the Burnham Committee in England, consisting of representatives of primary school teachers, secondary school teachers, headmasters, municipalities, and District Board schools, to recommend uniform scales of pay, superannunation benefits and conditions of service from time to time.

செய்தித் திரட்டு

ஸ்ரீ சாரதா உயர்தர ஆரம்பப் பாடசாலை, மாம்பலம்.

1. 26-2-1960 அன்று மேற்படி பள்ளி உடற்பயிற்சிக் கழகத்தின் 24-வது பரிசளிப்பு விழாவும் குருநாயர் தினமும் தென் சென்னை மாவட்ட கல்வி அதிகாரி திரு. R. ஷண்முகம், M.A.,B.T., அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

2. 12-3-60 அன்று மேற்படி பள்ளி ஆசிரியர்களின் சாரதா நாடக மன்றத்தினர் பள்ளி நிதி உதவிக்காக தி. நகர் வாணி மஹாலில் "மானங் காத்த மாவீரன்" என்ற தமிழ் நாடகத்தை நடித்தனர். குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. அழ. வள்ளியப்பா அவர்கள் தலைமை வகித்து நடிகர்களைப் பாராட்டிப் பேசினர்.

3. 14-3-60 அன்று ஆசிரியர் சங்கத்தின் இறுதிச் சொற் பொழிவு விழா மயிலை விவேகானந்தா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ஸ்ரீ C. ஜெகந்நாதச்சாரி அவர்கள் தலைமையில் நடை பெற்றது. "தமிழ் இன்பம்" என்ற தலைப்பில் அவர் சிறப்புமிக்க சொற்பொழிவுஒன்று நிகழ்த்தினர்.

4. 23-3-60 அன்று மேற்படி பள்ளியின் 24-வது ஆண்டு விழா, சென்னை ராஜ்ய அறநிலையப் பாதுகாப்பு இலாகா ஆணையாளர் உயர்திரு A. உத்தண்டராமன், I. A. S. அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிறுவர் சிறுமிகளின் கலை நிகழ்ச்சிகள் பல நடத்தப்பட்டன.

5. 25-3-60 அன்று எட்டாம் வகுப்பு மாணவ, மாணவிகளால் குருதக்ஷிணை வைபவம் நடத்தப்பட்டது. பள்ளி அதிதேவதை ஸ்ரீ சாரதா தேவிக்கு விசேஷ அலங்காரமும் பூஜையும் நடைபெற்றது. சிறுவர் சிறுமிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

6. 10-4-60 அன்று கைத்தொழிற் பகுதியின் 5-வது பொருட் கண்காட்சி நடைபெற்றது. சென்னை ராஜ்ய சிறு கைத்தொழில் இலாகா உதவி இயக்குநர் திரு. D. மரியசூசை அவர்கள் கண்காட்சியைத் துவக்கி வைத்தார். காட்சியில் வைக்கப்பட்ட செதுக்குச் சித்திர வேலைப் படங்கள், டவல்கள், ஷர்ட்டிங் துணிகள், எம்பிராய்டரி பைகள், பாய்கள் ஆகிய அனைத்தும் விற்பனை செய்யப்பட்டன.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை

10-4-60 அன்று வாலாஜாபாத் இந்து மத பாடசாலையின் 44-ம் ஆண்டு விழா சென்னை அரசின் அறநிலையப் பாதுகாப்புத் துறையின் துணை ஆணையாளர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ.,பி.எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. "வாலாஜாபாத் குருகுலத்தில் சிறுவர்கள் நல்ல குடி மக்களாக விளங்குதற்குரிய எல்லாம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இங்குப் படிக்கும் பேறு பெற்றவர்கள் வருங்காலத்தில் நாட்டின் பல துறைகளிலும் சிறந்து விளங்குவார்கள்" என்று தலைவர் அவர்கள் முன்னுரையில் குறிப்பிட்டார்கள்.

சென்னை ரிசர்வ் பாங்கியின் பொருளாளர் திரு. பி. வி. விசுவநாத ஐயர், எம்.ஏ., அவர்கள் மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினர். மாணவர்கள் படிப்பிலும் ஏனையவற்றிலும் சிறந்து விளங்குதற்கு அறிகுறியாகச் சிலருக்குப் பரிசுகள் தரப்பட்டன. கடவுள் அன்பு, நல்லொழுக்கம் முதலிய பல வகைப் பரிசுகள் வழங்குவதைப் பாராட்டினர்.

மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கும் பணியை இந்திய அரசாங்கத்தில் துணைச் செயலாளராக இருந்து ஓய்வுபெறும் திரு. வ. சண்முகம் அவர்கள் ஆற்றினர், குழந்தைகள் ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை வாழப் பழகுதல் வேண்டுமென்பதை வற்புறுத்தி அப் பெரியார் வாழ்த்தினர்.

பின்னர்க் காஞ்சிபுரம் பச்சையப்பர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவரும்

தமிழ்ப் பேராசிரியருமான உயர்திரு ந. சஞ்சீவி, எம்.ஏ., அவர்களுக்குப் பாடசாலையின் சார்பில் ஓர் பாராட்டு வாசித் தளிக்கப்பட்டது. இந்திய அரசாங்கத் தின் உயிர் ஒப்பந்தக் கழகத்தில் வேலை பார்க்கும் திரு. நாக முத்தையா, பி.காம்., அவர்கள் அவரை மேலும் பாராட்டி பேசினர். பேராசிரியர் சஞ்சீவி அவர்கள் மலேயா நாட்டில் தாம் கண்ட உயர்ந்த வைகளைப் பற்றியெல்லாம், இந்துமத பாடசாலையைப்பற்றி, அங்குத் தெரிந்த வர்கள் பலர் கூறுபவைகளை யெல்லாம் சொன்னார்கள்.

பண்ருட்டி பாக்கு வியாபாரம் உயர் திரு. பசுபதி முதலியார் அவர்கள் பாடசாலைக்கு ரூபாய் இரண்டாயிரத்து ஒன்று நன்கொடை அளித்தார்கள். இவ்வாறு பாடசாலைக்கு நன்கொடை யளிப்பது பெரிய அறச் செயலாகும் என்று தலைவர் அவர்கள் கூறினார்கள்.

பாடசாலைச் செயலாளர் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் யாவருக்கும் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.

ஊஞ்சலூர் போர்டு ஆரம்பப்பள்ளி

ஊஞ்சலூர் போர்டு ஆரம்பப் பள்ளி யில் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேல் உதவியாகவும், தலைமையாகவும் ஆசிரி யப் பணியாற்றி, ஓய்வு பெறும் திரு. V. நாராயணச்சார் அவர்களுக்கும் அதே தேதியில் ரிடையராகும் உதவி ஆசிரியர் திரு. N. ராகவேந்திர ராவ் அவர்களுக் கும் பள்ளி ஆசிரியர்கள் சார்பில் உள் ளூர், மிராசுதார், திரு. U. M. வைதீஸ் வரன் அவர்கள் தலைமையில் ஒரு தேனீர் விருந்து நடந்தேறியது. ஆசிரியர்களின் குணாதிசயங்களைப் பற்றியும் நற்பணி யைப் பற்றியும் பலர் பாராட்டுரை நிகழ்த் தினார்கள். தலைவர் தம் முடிவுரையில் திரு. நாராயணச்சார் ஒரே பள்ளியில் 20 ஆண்டுகளுக்குமேல் சேவை செய்து வருவதானது அவரது சலியா உழைப் பும், பொது மக்களது ஆதரவும்தான் காரணம் என்றும், ஜில்லா போர்டார் இவ்வித ஆசிரியர்களின் சேவையை மேலும் ஊக்குவிப்பதானது ஆசிரியர்களை உற்சாக மூட்டுவதாகும் என்றும் கூறி னார். பள்ளித்தலைமை ஆசிரியர் திரு. A. ராஜமாணிக்கம் வந்தனோபசாரம் கூறி னார்.

பாலர் கல்வி

தொகுதி 24.

பொருளடக்கம்

விஷயம்	பக்கம்
1. பூமியின் வடிவம் உருண்டை அல்ல	2
2. பிரிட்டனில் இளைஞர் விடுதிகள்	3
3 சிந்திரி ஆலை	5
4. உதவி பெறும் பள்ளி ஆசிரியர்	7
5. மெக்கானிக்கின் அற்புத சாதனை	9
6. சம்பளம் வசூலிக்காத ஆரம்பப் பாடசாலைகளுக்கு 20 சத விகித நிர்வாக மான்யம்	11
7. செய்தித் திரட்டு ...	13, 28, 45, 70, 80, 93, 108, 123, 136, 145, 169.
8. Government Orders	14
9. பள்ளிக் குழந்தைகளின் "வீடு"	18
10. தென்னிந்திய ஆசிரியர் சங்கம்	19
11. அயல் நாட்டுச் செய்திகள்	26
12. பத்திராதிபர் குறிப்புக்கள் ...	33, 95, 110, 133, 147, 171.
13. 49-வது சென்னை மாநில கல்வி மகாநாடு—சேலம்	35, 48.
14. நான்காம் வகுப்பு சமூக பாடமும் போதனமுறையும்	43, 50, 63, 73.
15. சமூகத்தை ஆக்குபவர் ஆசிரியர்களே	49
16. ஒரு தாய் செய்த மகத்தான சேவை	52
17. கல்வித்திட்டம்—நான்கு யோசனைகள்	54
18. பள்ளிச்சீரமைப்பு மாநாடு—ஆசிரியர் திட்டம், திருச்செந்தூர் வட்டம்	56
19. தென்னிந்திய ஆசிரியச்சங்க காரியதரிசியின் கடிதம் ...	60
20. உதவி பெறும் ஆரம்பப்பள்ளிகளும் ஆசிரியரின் சம்பளமும்...	61
21. கவியரசர் தாகூர் நினைவு விழா	65
22. இந்தியா வந்த முதலாவது யு. எஸ். வர்த்தகக்குழு ...	67
23. குழந்தைகளே நாட்டின் செல்வம்	68
24. சோவியத் கல்வி அமைப்பிற்கு பேராசிரியர் சர்மா பாராட்டு ...	68
25. உஸ்பெக் பள்ளிக்கு விஜயம்	69
26. பாராட்டுக்கடிதம்	70
27. விரைந்து கற்பதற்குச் சிறந்த உதவி கண்வழி, செவி வழிக் கல்விக் கழகம்	75
28. ஆசிரியருக்குக் கடிதங்கள்	78, 93.
29. ஆரம்ப ஆசிரியர்களின் அவல நிலைமை	85
30. ஒரு மனிதன் + ஓர் இயந்திரம் = 30 பேருக்கு வேலை ...	87
31. அஜர்பெய்ஜானிலுள்ள இந்து கோயில்	89
32. மதிப்புரை ...	96, 104, 124.

விஷயம்			பக்கம்
33. கல்விக்கோயில்	...	...	99
34. நவீன நூலகங்கள்	...	...	103
35. இந்தியா எழுத்தறிவைப் பரப்பும் பணி	...	...	105
36. ஏன் இவ்வளவு தாரதம்மியம்?	...	...	106
37. வேலை நிரந்திரம் (Security of Service)	...	...	107
38. கோவை மாவட்ட ஆசிரியர் பேரவை	...	...	115
39. குறைகள் தீர்ப்பீர் (பாட்டு)	...	...	119
40. அரும்பாவூரில் கட்டாயக் கல்வி சிறப்புக் கூட்டம்		...	120
41. பெரம்பலூர் வட்ட ஆரம்ப ஆசிரியர் சம்மேளனம் 3-வது மகாநாடு	...	...	121
42. மாற்றம் வேண்டும்	...	...	126
43. சந்திரனில் மனிதன்	...	...	127
44. ஜனாதிபதி ஐசன்ஹோவர்: 'கைராசிக்கார' விவசாயி		...	131
45. தென்னிந்திய ஆசிரியர் கல்வி ஆராய்ச்சிக்குழு		...	139
46. பாதை போடும் கலை	...	...	141
47. ஆசிரியர்களுக்கு தேசீய விருதுகள்	...	...	144
48. இந்திய நாட்டு ஆசிரியச் சங்கங்கள்	...	...	151
49. தனியார் துறைப்பள்ளி ஆசிரியர்கள் ஊதியமும், அரசியலாரும் ...	...	...	155
50. கணக்குக் கற்பித்தல்—சில ஆராய்ச்சித் துணிபுகள்		...	157

பத்திராதிபர் குறிப்புகள்

புதிய ஐந்தாம் வகுப்பு, ஆரம்பப் பள்ளியில் இருப்பதா, அல்லது உயர்தரப் பள்ளியுடன் இணைக்கப்பட வேண்டுமா என்பது ஒரு பிரச்னையாக இருக்கிறது. ஐந்தாம் வகுப்பில் ஆங்கில மொழி கற்பிக்க வேண்டும் என்ற புதிய திட்டத்தினுல், சில ஸ்தல ஸ்தாபனங்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நியமிக்க வேண்டுமென்று உயர்தர ஆரம்பப் பள்ளி கிரேடுஆசிரியர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து வருவதாகக் கேள்விப்படுகிருேம். இந்த நிலையில் அநேக உயர்தர ஆரம்ப பள்ளி கிரேடு ஆசிரியர்களுக்கு வேலையில்லா திண்டாட்டம் ஏற்படும் என்ற பயம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை கல்வி அதிகாரிகள் பரிசீலிக்க வேண்டும். நமது ஆரம்பப் பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும், 4, 5 வகுப்புகளில்மாணவர்களின் எண்ணிக்கைஅதிகரித்து வருவதாலும், இது வீண் பயம் என்றே சொல்ல வேண்டும். ஆசிரியர்களை வேலையினின்று நீக்குமுன் இவைகளைக் கவனித்து செய்யும்படி கேட்டுக் கொள்கிருேம்.

தவிர, எல்லா ஆரம்பப்பள்ளியிலும் 5ம் வகுப்பில் ஆங்கில மொழி போதிக்க போதுமான செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் உண்டா என்னும் விஷயத்தையும் நன்கு பரிசீலனை செய்ய வேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களில் இப்பொழுது இருந்து வரும் முறைப்படி சில செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்தான் நியமிக்க முடியும். அவர்களுக்கே செகண்டரி கிரேடு ஆசிரியர் சம்பளம் வழங்கப்படுகிறது. இந்த விகிதத்தை அதிகரிக்காமல் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை ஹையர் கிரேடு ஆசிரியர் சம்பளத்தில் வேலை செய்யச் சொல்வது அநீதி என்றே கூறலாம். தவிர, உயர்தரப்பள்ளியில்புதிய ஐந்தாம் வகுப்பு ஏற்படுத்த அனுமதி அளித்தால், கல்வித்தரன் உயர வழியுண்டு. இங்கு ஆங்கில மொழிக்கென்று தேர்ச்சி பெற்ற பல ஆசிரியர்கள் இருக்கின்ருர்கள். நல்ல புத்தகாலய வசதிகள் இருக்கின்றன. மேல் வகுப்புகளில் இம்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களின் மேற்பார்வையும், உதவியும் கிடைக்கும். எனவே, இன்னும் சில காலம் வரையில் இந்த வகுப்பை உயர்தரப் பள்ளியிலும் இணைக்க அனுமதியளிப்பது உசிதமாகும். அதிகாரிகள் இதைக் கவனிப்பார்கள் என்று நம்புகிருேம்.

பாலர் கல்வி

சென்ற இதழ் வெள்ளி மலர் எல்லா உயர்தரப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் இலவசமாக அனுப்பியுள்ளோம். எல்லா ஆசிரியர்களும் பார்த்திருப்பார்கள் என நம்புகிருேம். ஆசிரியர்களின் ஆதரவு இருந்தால்தான் பத்திரிகை நன்கு நடத்த முடியும். இதன் வருட சந்தா ரூபாய் இரண்டேதான். எல்லா ஆசிரியர்களும் 'பாலர் கல்வி'க்கு தக்க ஆதரவு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிருேம்.

மலேயா இந்திய ஆசிரியர்களின் நன்கொடை

சென்ற டிசம்பர்—ஜனவரி மாதத்தில் மலேயா மாநிலத்திலுள்ள செம்பிலான் பிராந்தியத்திலுள்ள 16 இந்திய ஆசிரியர்கள் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்திருந்தது நமது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். நமது பத்திராதிபர் சென்ற மாதம் கோலாலம்பூரில் நடந்த ஆசிய ஆசிரியர் மகாநாட்டிற்கு தலைமை வகிக்கும் பொழுது, செம்பிலான் பிராந்திய இந்திய ஆசிரியர் சங்கம் அவருக்கு இனிய வரவேற்பளித்து, தென் இந்திய ஆசிரியர் சங்கத்திற்கு அன்பளிப்பாக மின்சார கெடிகாரம் ஒன்று வழங்கினுர்கள். இக்கடிகாரம் நமது காரியாலயத்தில் அழகு வாய்ந்த இடம் பெற்றுள்ளது. செம்பிலான் ஆசிரியர்களுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிருேம். தமிழ் நாட்டுக்கும், மலேயாநாட்டு இந்தியர்களுக்குமிடையே இடைவிடாத தொடர்புக்கு இது ஒரு அன்பு சின்னமாக வழங்கும் என்பதில் ஐயமில்லை.

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited by Sri S. Natarajan & Published by Sri T. P. Srinivasavaradan for the S. I. T. U., at Rajah Annamalaipuram, Madras-28.

Regd. No. M. 3473
Registered with the Registrar of Newspapers for India under R. N. No. 1230/57.

எலிமெண்டரி பாடசாலைக்குரிய

எமது புதிய புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதியவை

1—5-ம் வகுப்புகளுக்குரியவை

பொங்கல் தமிழ் வாசகம்

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	37 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	50 ,,
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	65 ,,
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	85 ,,

கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,

லீலாவதி சுலப கணிதம்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	90 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 00

நவீன சுலப கணிதம்

முதல் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 25

நவீன் சமூக வரலாறு

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	45 ந.பை
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	75 ,,

புது முறை சமூக வரலாறு

முதல் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 12
இரண்டாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 90

நமது இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	80 ,,

கிண்டர்கார்டன் தமிழ் அப்பியாசங்கள்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	60 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	60 ,,
மூன்றும் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	60 ,,

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1